**தலைப்பு 242 – முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

முகாமைத்தவ சேவைகள் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஆகஸ்ட் 05 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரச நிதித் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு

அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஒரு மீண்டெழும் விடயத்திற்காக மற்றும் 02 மூலதன விடயத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா 2,200,000 ஆன ஒதுக்கங்கள் பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தன. | கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக எதிர்பார்த்தவாறு ஒதுக்கங்கள் பயன்படுத்தப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படாததுடன் நாட்டில் நிலவிய நிதி நெருக்கடி காரணமாக 2021 ஆகஸ்ட் 30 ஆந் திகதிய 21/1596/304/134 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் எதிர்பார்த்தவாறு மொத்தச் செலவுகள் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு தடுத்து வைக்க வேண்டியேற்பட்டது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாகவும் மற்றும் யதார்த்தமாகவும் வருடாந்த செலவு மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |
| **(ஆ) மேலதிக நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டமை** மீளாய்வாண்டில் 09 மீண்டெழும் செலவு விடயங்கள் மற்றும் 02 மூலதன செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 33,360,000 ஆன மேலதிக நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தமையால் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்தம் ரூபா 22,904,257 மட்டுமே | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 10,455,743 ஆன ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தது. அச்சேமிப்பு ஒவ்வொரு செலவு விடயங்களுக்கும் ஒதுக்கப்பட்டிருந்த தேறிய ஒதுக்கங்களில் 17 சதவீதத்திலிருந்து 88 சதவீதம் வரையான வீச்சிலான அளவில் காணப்பட்டது. | | |
| **(இ)** | **பௌதீகச் சொத்துக்களை கையகப்படுத்தல்**<br>2021 ஆம் ஆண்டில் காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 297,000 ஆன திறன் அபிவிருத்திக்கான செலவுகள் முதலீட்டு செயற்பாடுகளில் ''பௌதீகச் சொத்துக்களின் நிர்மாணம் அல்லது கொள்வனவுகள் மற்றும் ஏனைய முதலீடுகளைக் கைப்பற்றல்'' இன் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்ள முடியாது. திறன் அபிவிருத்திக்கான இலக்கம் - 2401 பதவியணி பயிற்சி செலவு விடயம் மூலதனத் தன்மை கொண்ட செலவு விடயம் என்பதுடன் அது சரியாக அரச கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டி இலக்கம் 2021/03 இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தலின் பிரகாரம் முதலீட்டுச் செயற்பாடுகளில் உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | நிதிச் செயலாற்றல் கூற்றில் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள பௌதீகச் சொத்துக்களின் நிர்மாணம் அல்லது கொள்வனவுகள் மற்றும் ஏனைய முதலீடுகளைக் கைப்பற்றல் பெறுமதி நிதி நிலைமை கூற்றிலும் உள்ளடக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் பெறப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆகஸ்ட் 15 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் காலாண்டு ரீதியாக நாளதுவரையாக்கப்பட்ட பதவியணி அறிக்கை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட | நெருக்கடி நிலைமைகளின் போதும் மற்றும் அதன் பின்னரும் அரச அமைச்சுக்கள், திணைக்களங்கள், சட்டரீதியான நிறுவனங்கள், மாவட்டச் செயலகங்கள், மற்றும் 810 பிரதேச செயலகங்களின் பதவியணி | திணைக்களத்தின் செயற்பாடுகள் திட்டத்திற்கு இணங்க நிறைவேற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியிருந்தது. 2018 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரையிலான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இச்செயற்பாடு உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்நோக்கத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட விளைவு மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | காலாண்டு அறிக்கைகளை போன்று பெற்றுக் கொள்வதற்காக எமது திணைக்களத்தினால் குறிப்பிட்ட அரச நிறுவனக் கடிதம் மூலம் மற்றும் தொலைபேசி மூலம் மற்றும் பதிவுத் தபால் மூலம் காலத்திற்கு காலம் தெரிவிக்கப்பட்டு சரியான மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட பதவியணி காலாண்டு அறிக்கை தேவைக்கேற்ப கொண்டு வரப்பட்டு 2021.12.31 இல் பதவியணி காலாண்டறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. எனினும் அரச அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களில் 2020 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நிகழும் கட்டமைப்பு மாற்றங்கள் அடிப்படையில் பதவியணி தகவல்கள் சரியாக நாளதுவரையாக்கப் படுவதற்கு நடைமுறைப் பிரச்சினைகள் காணப்பட்டமையால் எதிர்காலத்தில் இது தொடர்பாக அமைச்சரவைக்குத் தெரியப்படுத்தி வருடாந்தம் நாளதுவரையாக்கப் படுகின்ற அறிக்கைகளை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | தபால் திணைக்களத்தின் பதவியணி மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதிவரை இச்செயற்பாடு நிறைவடையவில்லை. | பொதுமக்கள் மற்றும் ஏனைய தரப்பினரின் கருத்துக்களை கேட்பதற்காக அமைச்சரவையால் பரிந்துரைக்கப்பட்ட முறையான குழுவொன்று நியமிக்கப்பட்டு அக்குழுவின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரையிடின் அடிப்படையில் தபால் மற்றும் புகையிரத சேவைகளை மறுசீரமைப்பதற்கான | திட்டத்தின் பிரகாரம் பதவியணி மீளாய்வு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கைகளை எடுப்பது பொருத்தமானதென 2017.12.19 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நியமிக்கப்பட்ட அதிகாரக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் இந்த நிறுவனத்துடன் தொடர்புடைய நிறுவனக் கட்டமைப்பு, பணியாளர்களின் எண்ணிக்கைக் கட்டமைப்பு தொடர்பாக விரிவான கலந்துரையாடல் ஒன்றை நடாத்தியதன் பின்னர் பதவியணி மீளாய்வு நடாத்துதல் பொருத்தமானதென அவதானிக்கப்பட்டது. ஆனால் நாட்டில் நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக நாட்டின் நிலைமையைக் கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்ட தரவுகளைச் சேகரிப்பதற்காக அதிகாரிகளைச் சேர்த்துக் கொள்ள முடியாததால் மீளாய்வு செய்யப்படுவதற்கு முடியாதிருந்தது. | |
| (இ) | அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் பதவியணியை அங்கீகரிப்பது தொடர்பான அளவுகோல்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களிற்காக பதவியணி அங்கீகரிக்கப்படுவதற்கான அளவுகோல்கள் தொடர்பான ஆரம்பக் கலந்துரையாடலொன்று தேசிய சம்பளங்கள் ஆணைக்குழுவுடன் இதுவரை நடாத்தப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்று தேசிய சம்பளங்கள் ஆணைக்குழுவின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. | அமைச்சுக்கள் மற்றும் திணைக் களங்களின் பதவியணி சரியாக அங்கீகரிக்கப் படுவதற்கான அளவுகோல்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தின் 95 அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 19 பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டன. அவ்வெற்றிடப் பதவிகளில் சிரேஷ்ட மட்டத்தில் 13 பதவிகள் காணப்பட்டன. | சிரேஷ்ட மட்டத்தில் வெற்றிடங்கள் காணப்பட்ட மேலதிகப் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு பதில் கடமை அடிப்படையில் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டமை மற்றும் வெற்றிடமாகக் காணப்பட்ட பிரதிப் பணிப்பாளர் / உதவிப்பணிப்பாளர் பதவிகளுக்கு உரிய கடமை, சேவையாற்றுகின்ற பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர்களுக்கு கையளிக்கப்பட்டமையாலும் அவர்கள் தமது கடமை நேரத்திற்கு வெளியே அக்கடமைகளில் ஈடுபட்டதாலும் செயற்திறனில் குறிப்பிடத்தக்க தாக்கம் எதுவும் ஏற்படவில்லை. மனிதவள முகாமைத்துவ நிபுணர், பணி ஆய்வு நிபுணர் மற்றும் புள்ளிவிபரவியல் நிபுணர் போன்ற பதவிகளுக்கு தகுந்த அதிகாரிகளை நியமிப்பதற்கு முடியாதிருந்தமையால் 2021 ஆம் ஆண்டில் அப்பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது பதவியணியை திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |